முழுவதும் இருக்கின்ற 22 மாநிலங்களில் 6 மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் மேலவையெல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் நம்முடைய மாநிலத்தில் அடிக்கடி வந்துபோனது உண்டு. இப்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு திட்டவட்டமாக எடுக்கப்படவில்லை. திட்டவட்டமாக எடுக்கப்படுகிற நிலையில் இந்த அவைக்குக் கொண்டு வரப்படாமல் எந்த முடிவும் எடுக்க முடியாது. அவையினுடைய கருத்தை அறிந்து, அவையினுடைய முடிவுக்குப் பிறகுதான் அது எடுக்கப்படும். அப்படி அவையினுடைய கருத்து வந்து, செயற்குறிப்பு போடப்பட்டு, அவைக்கு கொண்டுவருகின்றபோது, அவையில் கருத்தை தெரிவிக்கவோ, அப்போது அதற்கான காரண காரியங்களை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பும் ஏற்படும். இப்போது திட்டவட்டமான செயற்குறிப்பு, இன்றைய நிலையில் இந்த நேரத்தில் இல்லை என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(ஈ) பிற்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு குறித்து

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பிற்பட்டோர் நலனுக்காக பாடுபட்டவர் தந்தை பெரியார் அவர்கள். அவர்களுடைய கொள்கையின்படி கல்வி, வேலைவாய்ப்பு, பல்வேறு துறைகளில் இருகின்ற முன்னேற்றங்கள் இவைகளைப் பங்கிட்டுத் தரவேண்டும் என்பது பெரியார் அவர்களுடைய கொள்கை ஆகும். அதேபோல் தமிழகத்தில் இருக்கின்ற 5 கோடி மக்களில் 2 கோடி மக்கள் அடங்கிய வன்னிய சமுதாயத்தினர் கடந்த 6ஆம் தேதி அன்று தமிழகத்தில் இந்த நிலையை வலியுறுத்தி தலையை எண்ணுகிற முறையில் எங்களுக்கும் கல்வி, தொழில், வேலை வாய்ப்பில்.........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இதை டிபேட்டில் பேசலாம். (குறுக்கீடு).

(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள குறுகிய கால வினா......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடிந்து போன விவகாரம். அதை விடுங்கள். சில நேரங்களிலே உங்களுக்கு விதியை மீறி செய்திருக்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லும்போது நான் விதியை மீறி செய்து இருக்கிறேன் என்று சொன்னீர்கள்..............